**செய்தி வெளியீடு எண்: 186** **நாள்: 06.03.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (6.3.2020) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் 335 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கரூர் மாவட்டம், காவேரி வடிநிலத்திலுள்ள கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பினை புனரமைத்து, மேம்படுத்தி, பாசன அமைப்பில் பாசன மேலாண்மையினை திறம்பட செய்யும் பணிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பொதுப்பணித் துறை சார்பில் 209 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 33 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், நிலத்தடி நீரை செறிவூட்டவும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 335 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கரூர் மாவட்டம், காவேரி வடிநிலத்திலுள்ள கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பினை புனரமைத்து, மேம்படுத்தி, பாசன அமைப்பில் பாசன மேலாண்மையினை திறம்பட செய்யும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், கரூர் மாவட்டத்தில் 20,185 ஏக்கர் நிலங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 3,589 ஏக்கர் நிலங்கள், என மொத்தம் 23,774 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், நாரணபுரம் கிராமம், கூடலூர் குளத்திற்கான கால்வாய் பிரியும் இடத்தில் கலிங்கலாற்றின் குறுக்கே 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிரிவு அணை மற்றும் சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமம், நிசப நதியின் குறுக்கே 1 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மண்ணூர் கிராமம், கோரையாற்றின் குறுக்கே 1 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, கோயம்புத்தூர் தெற்கு வட்டம், திருமலையம்பாளையம் கிராமத்தில் தெப்பக்குளப்பாறை அருகில் குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம், பெரியபள்ளத்தின் குறுக்கே 1 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் மேட்டுப்பாளையம் வட்டம், கெம்மாரம்பாளையம் கிராமம், பெரியபள்ளத்தின் குறுக்கே 1 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கூடலூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே 15 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் விருத்தாசலம் வட்டம், பரவளூர் கிராமத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே 10 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

என மொத்தம் 33 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஒரத்தூர் கிராமத்தில் 55 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடையாற்றுக்கு செல்லும் ஒரத்தூர் கிளை ஆற்றின் குறுக்கே புதிய நீர் தேக்கம் அமைத்தல், வடிநிலங்களுக்கு உள்ளேயே பகிர்மான கால்வாய் அமைத்து நீர் வழங்குதலை அதிகப்படுத்துதல் மற்றும் வெள்ளத் தணிப்பு செய்யும் பணி; செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இயற்கை சூழலுக்கு ஏற்ப புனரமைக்கும் பணி;

உலக வங்கியின் செப்பனிடுதல், சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின் கீழ், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 121 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கண்மாய்களின் கரைகளை பலப்படுத்துதல், கழுங்குகள், மடைகள் பழுதுபார்த்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்தல், வரத்துக் கால்வாய்கள் மற்றும் பாசனக் கால்வாய்களை முழுமையாக தூர்வாருதல் போன்ற 26 திட்டப் பணிகள்;

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், அணைக்கரைப்பட்டி கிராமம், கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே மதுரை வீரன் கோவில் அருகில் 1 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை; மாணிக்காபுரம் கிராமம் அருகே சுத்தகங்கை ஓடையின் குறுக்கே 1 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை; போடி கிராமம், சின்னாற்றின் குறுக்கே 2 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை; ஆண்டிபட்டி வட்டம், சண்முகசுந்தராபுரம் கிராமம் அருகே நாகலாறு ஓடையின் குறுக்கே 2 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

என மொத்தம் 209 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

நீர்வள ஆதாரத் துறையில் காலியாகவுள்ள 285 உதவிப் பொறியாளர் பணியிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை கட்டட அமைப்பில் காலியாகவுள்ள 125 உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று 7 பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

புதுடில்லியில் 19.2.2020 அன்று மத்திய நீர்பாசனம் மற்றும் எரிசக்தி வாரியத்தின் (Central Board of Irrigation and Power) சார்பில் நடைபெற்ற நீர்பாசனம் மற்றும் எரிசக்தி தினவிழாவில், அகில இந்திய அளவில் நீர்மேலாண்மை, எரிசக்தி மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆகியவற்றில் சிறப்பாக திட்டங்களை செயல்படுத்திய மாநிலங்கள், அமைப்புகள்

மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. அவ்விழாவில், தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறை மூலமாக அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை (Dam Rehabilitation and Improvement Project) சிறப்பாக செயல்படுத்தியமைக்காக, மாண்புமிகு மத்திய ஜல்சக்தி துறை இணை அமைச்சர் திரு. ரத்தன்லால் கட்டாரியா அவர்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருதினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களிடம் இன்று பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. கே. இராமமூர்த்தி, தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரித்தல்) திரு. பெ.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**